**R–2875**

**Sub. Code**
**411201**

**M.A. DEGREE EXAMINATION, APRIL 2019**

**Second Semester**

**Tamil**

சமய இலக்கியம்

**(CBCS – 2018 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ (10 × 2 = 20)

**பின்வரும்** வினாக்களுக்கும் **ஓரிரு சொல் /தொடர்களில்** விடை தருக.

1. திருநாவுக்கரசரை ‘அப்பா’ என அழைக்க காரணம் என்ன?
2. சுந்தரரின் வேறுபெயர்கள் யாவை?
3. திருமந்திரம் - சிறு குறிப்பு தருக.
4. சேந்தனாரின் பாடல்கள் எந்தத் திருமுறையில் இடம்பெற்றுள்ளன?
5. இரண்டாம் திருவந்தாதியைப் பாடியவர் யார்?
6. நாலாயிர திவ்வியப் பிரபந்தத்திற்கு வழங்கப்பெறும் வேறுபெயர்கள் யாவை?
7. பெரியாழ்வாரால் வளர்த்தெடுக்கப்பட்டவர் யார்?
8. திருமங்கையாழ்வார் இயற்றிய நூல்கள் யாவை?
9. இறைவனால் ‘அம்மையே’ என அழைக்கப்பட்டவர் யார்?
10. திருப்பாவையின் சிறப்புகளைச் சுட்டுக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக.

11. (அ) திருஞானசம்பந்தரின் பாடற் கருத்துக்களை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) மாணிக்கவாசகர் பாடலில் உவமைத் திறனை வெளிப்படுத்துக.

12. (அ) சேந்தனார் இறைவனை வாழ்த்தும் பாங்கினை எழுதுக.

(அல்லது)

(ஆ) கருவூர்த்தேவரின் பக்திச் சுவையை விளக்குக.

13. (அ) பொய்கையாழ்வார் இறைவனைப் போற்றும் விதத்தினை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) திருமழிசையாழ்வாரின் புலமையைப் புலப்படுத்துக.

14. (அ) கண்ணனின் இயல்புகளாகப் பெரியாழ்வார் கூறுவனவற்றை எழுதுக.

(அல்லது)

(ஆ) திருமங்கையாழ்வாரின் பாடற் தன்மையை வெளிப்படுத்துக.

15. (அ) காரைக்காலம்மையாரின் பக்தி மார்க்கத்தை வெளிப்படுத்துக.

(அல்லது)

(ஆ) திருப்பாவையில் திருமாலின் சிறப்புகளை எடுத்துக்காட்டுக.

## பகுதி இ (3 × 10 = 30)

பின்வருவனவற்றில் **மூன்றனுக்கு** விரிவாக விடை தருக.

16. சிவபுராணத்தில் மாணிக்கவாசகர் குறிப்பிடும் இறைவனது பெருமைகள் குறித்து கட்டுரை வரைக.

17. திருமூலரின் உபதேசங்களை விவரிக்க.

18. இறைவனது மாட்சிமைகளாக பூதத்தாழ்வார் பாடிய கருத்துக்களைக் கட்டுரைக்க.

19. பெரியாழ்வார் இறைவனைத் தாலாட்டும் பாங்கினை வெளிப்படுத்துக.

20. ஆண்டாளின் திருப்பாவை வாயிலாக அறியலாகும் இறை வழிபாட்டினை விவரிக்க.

———————

| R–2876 |
|---|

| Sub. Code |
|---|
| 411202 |

## M.A. DEGREE EXAMINATION, APRIL 2019

### Second Semester

### தமிழ்

### இலக்கணம் - தொல்காப்பியம் - சொல்லதிகாரம்

### (CBCS – 2018 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ (10 × 2 = 20)

**பின்வரும் அனைத்து** வினாக்களுக்கு ஓரிரு சொல்/தொடர்களில் விடை தருக.

1. ‘அம்முப்பால் சொல் உயர்திணையவ்வே’ – முப்பால் எவை?

2. ஒன்றன்பால் ஈறுகளைக் கூறுக.

3. வேற்றுமையியல் என்றால் என்ன?

4. கு, ஐ என்ற இரண்டு உருபுகளும் அஃறிணையில் எதைப் பெறுதல் இல்லை?

5. விரவுப்பெயர் என்றால் என்ன?

6. தன்மை ஒருமை வினைமுற்று ஈறுகளைக் கூறுக.

7. இடைச் சொல்லின் பொது இலக்கணம் தருக.

8. ‘பசப்பு’ என்ற சொல் உணர்த்தும் பொருள் யாது? எ.கா.தருக.

9. எழுத்தொடு புணர்ந்த சொல் எது? எ.கா.தருக.

10. பிரிநிலை எச்சத்தின் இயல்பினைக் கூறுக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

**பின்வரும்** வினாக்களுக்கு விடை தருக.

11. (அ) மரபுவழுவமைதி குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) திணை பால்களுக்குப் புறநடையாக வரும் கிளவியாக்கச் செய்திகளை எழுதுக.

12. (அ) மூன்றாம் வேற்றுமையும் அதன் பொருட் பாகுபாடுகளையும் விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) விளியேற்கும் புள்ளி ஈறுகள் பற்றி விளக்கி எழுதுக.

13. (அ) பாலறிவந்த உயர்திணைப் பெயர்களைச் சான்று காட்டி விளக்குக.

(அல்லது)

(ஆ) இருதிணைக்கும் உரிய வினைச் சொற்கள் குறித்து விளக்கி எழுதுக.

14. (அ) இடைச்சொற்களின் பயன்பாடு குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) குறிப்புப் பொருள் உணர்த்தும் உரிச்சொற்களை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

15. (அ) தொகைச் சொல் பற்றித் தொல்காப்பியம் உரைக்கும் கருத்துக்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) வினைமுற்றின் இலக்கணம் கூறி விளக்கி எழுதுக.

பகுதி இ (3 × 10 = 30)

**பின்வரும்** வினாக்களில் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. தொடர் இலக்கணம் குறித்த செய்திகளைக் கிளவியாக்கத்தின் வழி விவரிக்க.

17. விளிமரபுச் செய்திகளைத் தொகுத்துரைக்க.

18. வினைச் சொற்களின் வகைகளை விவரித்துரைக்க.

19. இடையியல் உணர்த்தும் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

20. பொருள்கோளின் வகைகளை விளக்கிக் கட்டுரை வரைக.

| R–2877 |
|---|

| Sub. Code |
|---|
| 411203 |

**M.A. DEGREE EXAMINATION, APRIL 2019**

**Second Semester**

தமிழ்

பொது மொழியியல்

**(CBCS – 2018 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி – அ $(10 \times 2 = 20)$

**பின்வரும்** வினாக்களுக்கு **ஓரிரு சொல்/தொடர்களில்** விடை தருக.

1. மொழியியல் என்றால் என்ன?

2. ஒலியன் வகைகள் சிலவற்றைக் குறிப்பிடுக.

3. ஒலி என்பது யாது?

4. மாற்றொலி என்பதனை விளக்குக.

5. உருபு என்றால் என்ன?

6. வேர்ச்சொல் என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.

7. தொடர் என்பது யாது?

8. அண்மையுறுப்பு என்றால் என்ன?

9. ஒரு பொருட் பன்மொழிக்கு எடுத்துக்காட்டு தருக.

10. ஒப்பிட்டுச் சொல் என்பதனை விளக்குக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கு விடை தருக.

11. (அ) உயிரொலிகள் குறித்து மொழியியலாளர்களின் கருத்துக்களை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) மொழியியலின் பிரிவுகள் குறித்து எழுதுக.

12. (அ) வேற்றுநிலைக் கொள்கை குறித்து எடுத்தெழுதுக.

(அல்லது)

(ஆ) ஒலியன் சேர்க்கைகள் பற்றி எழுதுக.

13. (அ) ஒட்டுகள் என்பதனைத் தெளிவுபடுத்துக.

(அல்லது)

(ஆ) உருபொலியனியலின் மாற்றம் என்பதனை தெளிவுறுத்துக.

14. (அ) தொடரியலின் வகைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) மாற்றிலக்கணத்தில் பொருண்மை குறித்து எழுதுக.

15. (அ) பொருண்மை மாற்றம் என்பதனை விளக்குக.

(அல்லது)

(ஆ) பல பொருள் ஒருசொல் குறித்து எழுதுக.

பகுதி இ (3 × 10 = 30)

பின்வருவனவற்றில் **மூன்றனுக்கு** விரிவாக விடை தருக.

16. மொழியியலாளர்கள் குறிப்பிடும் ஒலியுறுப்புகளின் செயல்பாடு குறித்து கட்டுரை வரைக.

17. ஒலியன் கொள்கைகள் குறித்து கட்டுரைக்க.

18. உருபன்களைக் கண்டறிய உதவும் நைடாவின் விதிகளை விவரிக்க.

19. மாற்றிலக்கணக் கோட்பாட்டினைத் தெளிவுறுத்துக.

20. பொருள் மயக்கங்களும் காப்புகளும் குறித்து கட்டுரை வரைக.

**R–2878**

**Sub. Code**
**411502**

**M.A. DEGREE EXAMINATION, APRIL 2019**

**Second Semester**

**Tamil**

தமிழ் இலக்கிய வரலாறு

**(CBCS – 2018 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

**பின்வரும்** அனைத்து வினாக்களுக்கு ஓரிரு சொல்/தொடர்களில் விடை தருக.

1. இடைச்சங்க காலத்தில் தோன்றிய இலக்கண நூல்களைக் கூறுக.

2. சங்க இலக்கியத்தில் ஐந்து திணைகளைப் பற்றியும் ஐந்து புலவர்கள் பாடிய பாடல்களைக் கொண்ட நூல் எத்தனை? அதன் பெயரினைக் கூறுக.

3. நீதி இலக்கிய காலத்தில் தோன்றிய இலக்கியங்களின் பாடுபொருளாக இருந்தவை?

4. பௌத்த சமயக் காப்பியங்கள் இரண்டினைக் கூறுக.

5. ‘முதல் திருவந்தாதி’ என்ற நூலை இயற்றியவர் யார்?

6. ‘அழுகிணிச் சித்தர்’ – பெயர்க்காரணம் தருக.

7. சிற்றிலக்கியங்கள் மிகுதியாகத் தோன்றிய காலம் எது?

8. எச்.ஏ. கிருஷ்ணபிள்ளை இயற்றிய நூல்கள் மூன்றின் பெயரினைக் கூறுக.

9. நாவல் இலக்கியத்துறையை தமிழில் உலகிற்கு வழங்கியவர் யார்?

10. மணிக் கொடிக் கால எழுத்தாளர்கள் நால்வரின் பெயரினை கூறுக.

பகுதி ஆ (5 × 5 = 25)

**பின்வரும்** வினாக்களுக்கும் விடை தருக.

11. (அ) தமிழின் தொன்மை குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) எட்டுததொகைப் புறப்பொருள் பற்றிய நூல்களின் சிறப்புகள் குறித்து விளக்கி எழுதுக.

12. (அ) திருக்குறளின் தனித்தன்மை குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) சமணக் காப்பியங்களின் வளர்ச்சி குறித்து விளக்கி எழுதுக.

13. (அ) நாயன்மார்களின் தமிழ்த் தொண்டு குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) சித்தர்களின் தமிழ்ப் பணி குறித்து விளக்கி எழுதுக.

14. (அ) கலம்பக இலக்கியத்தின் தோற்றச் சூழல் குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) கிறித்தவர்களின் தமிழ்த் தொண்டு குறித்து விளக்கி எழுதுக.

15. (அ) இசைத் தமிழின் வளர்ச்சி நிலை குறித்து மதிப்பிடுக.

(அல்லது)

(ஆ) மரபுக் கவிதையின் தனித் தன்மைகள் குறித்து விளக்கி எழுதுக.

பகுதி இ (3 × 10 = 30)

பின்வரும் வினாக்களில் **மூன்றனுக்கு** கட்டுரை வடிவில் விடை தருக.

16. தொல்காப்பியத்தின் சிறப்புகள் குறித்துக் கட்டுரை வரைக.

17. தமிழ்க் காப்பியங்களின் வளர்ச்சி குறித்து விவரிக்க.

18. பன்னிரு ஆழ்வார்களின் தமிழ்ப் பணி குறித்து விவரிக்க.

19. சிற்றிலக்கியத்தின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்துக் கட்டுரை வரைக.

20. சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து விவரிக்க.

**R–2879**

| Sub. Code |
|---|
| 411401 |

**M.A. DEGREE EXAMINATION, APRIL 2019**

**Fourth Semester**

**Tamil**

சங்க இலக்கியம்

**(CBCS – 2016 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் சுருக்கமான விடை தருக.

1. குறுந்தொகை கடவுள் வாழ்த்தப் பாடலை பாடியவர் யார்?

2. எயிறு என்னும் சொல்லின் பொருள் தருக.

3. அகநானூறு – குறிப்பு வரைக.

4. 'ஆழி முதல்வ' என்றும் பரிபாடலடி யாரைக் குறிப்பிடுகின்றது?

5. ஐங்குறுநூற்றில் குறிஞ்சித் திணைப் பாடல்களைப் பாடியவர் யார்?

6. பரிபாடல் குறிப்பிடும் தெய்வங்கள் யாவை?

7. செவியறிவுறூஉ – குறிப்பு வரைக.

8. பதிற்றுப்பத்தின் சிறப்புகள் இரண்டினைத் தருக.

9. முல்லைப்பாட்டில் இடம்பெறும் கார்கால வருனணை குறித்து எழுதுக.

10. பாசறை – குறிப்பு வரைக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

பின்வரும் வினாக்களுக்கு **ஒரு பக்க** அளவில் விடை தருக.

11. (அ) ஒக்கூர் மாசாத்தியார் பாடல்களில் இடம்பெறும் தலைவி குறித்த செய்திகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) பரத்தை மாட்டு பிரிந்தவழி தலைமகனுக்கு தலைவி கூறியவற்றை அம்மூவணார் பாடல் வழி விளக்குக.

12. (அ) அல்லகுறிப்பட்டுழி தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லிய செய்திகளைப் பரணர் பாடல்வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) 'நின்ற சொல்லர் நீடு தோன்று இனியர்' எனத் தொடங்கும் தலைவி கூற்றில் அமைந்த பாடலின் செய்திகளை விளக்குக.

13. (அ) செலவு அழுங்குவித்தல் துறையை பாலைக்கலி பாடல் வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) திருமாலின் சிறப்புகள் குறித்து கீரந்தையார் குறிப்பிடுவனவற்றை விளக்குக.

14. (அ) சோழன் குளமுற்றுத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் சிறப்புகள் குறித்து ஆலூர் மூலங்கிழார் புறப்பாடல் வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) இளஞ்சேரல் இரும்பொறையின் படைச்சிறப்பினை விளக்குக.

15. (அ) முல்லைப்பாட்டில் படைவீட்டு அரண் குறித்து விவரி.

(அல்லது)

(ஆ) போரில் வெற்றி பெற்று வரும் தலைவனின் வருகை குறித்து முல்லைப்பாட்டு குறிப்பிடுவனவற்றை விளக்குக

### பகுதி இ (3 × 10 = 30)

பின்வரும் வினாக்களுக்கு **மூன்றனுக்குக்** கட்டுரை வடிவில் விடை தருக.

16. நும் குறுந்தொகைப் பாடப்பபதியில் இடம்பெறும் தலைவியின் மன நிலை குறித்து விவரி.

17. செவிழி கூற்றில் அமைந்த அகநானூற்று கயமனார் பாடலில் இடம்பெறும் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

18. நல்லழிசியார் வையை குறித்து அமைந்த பாடற்கருத்துக்களை எடுத்துரைக்க.

19. வினை நவில் யானைதொழிழ் நவில் யானை எனும் தலைப்பில் அமைந்த பதிற்றுப்பத்து பாடல்களை விளக்குக.

20. முல்லைபாட்டில் தலைவனின் நிலை குறித்துக் கட்டுரை வரைக.

———————

**R–2880**

**Sub. Code**
**411402**

**M.A. DEGREE EXAMINATION, APRIL 2019**

**Fourth Semester**

**Tamil**

இலக்கணம் : தொல்காப்பியம் பொருளதிகாரம் (பின்னான்கு இயல்கள்)

**(CBCS – 2016 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ (10 × 2 = 20)

பின்வரும் **அனைத்து** வினாக்களுக்கும் **ஓரிரு சொல்/தொடர்களில்** விடை தருக.

1. அகத்திற்கும் புறத்திற்கும் பொதுவான மெய்ப்பாடுகள் எத்தனை?

2. மெய்ப்பாட்டிற்குரிய தலைவன் தலைவியின் ஒப்புமைகள் எத்தனை?

3. வினையுவமத்திற்குரிய உருபுகள் எத்தனை?

4. உவமப் போலிகள் யாவை?

5. கைகோள் எத்தனை வகைப்படும்? யாவை?

6. வண்ணம் எத்தனை வகைப்படும்?

7. பிண்டம் என்றால் என்ன?

8. வகையுளி என்பது யாது?

9. மொழிபெயர்ப்பு எவ்வகை நூல்?

10. நண்டு எத்தனை அறிவு உயிர்?

## பகுதி ஆ (5 × 5 = 25)

பின்வரும் வினாக்களுக்கு **ஒரு** பக்க அளவில் விடை தருக.

11. (அ) தொல்காப்பியர் பேசும் தலைமக்களுக்குரிய ஒப்புமைகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) 'அழிவில் கூட்டம்' என்றால் என்ன? விளக்கி எழுதுக.

12. (அ) உள்ளுறை உவமம் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) நாலிரண்டாகும் பாலுமா ருண்டே-விளக்குக.

13. (அ) ஆசிரியப்பாவின் இலக்கணம் தருக.

(அல்லது)

(ஆ) பண்ணத்தியின் இயல்புகளைச் சுட்டி வரைக.

14. (அ) பொருந்தக் கூறிய எட்டு எவை? விளக்குக.

(அல்லது)

(ஆ) வாழ்த்தியல் என்றால் என்ன? வகைகளைச் சுட்டி வரைக.

15. (அ) உயிர்களின் இளமைப் பெயர்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) புல்லின் உறுப்புகளாகத் தொல்காப்பியம் குறிப்பிடுவனவற்றை எழுதுக.

## பகுதி இ (3 × 10 = 30)

பின்வரும் வினாக்களில் **மூன்றனுக்குக்** கட்டுரை வடிவில் விடை தருக.

16. தொல்காப்பியரின் மெய்ப்பாட்டியல் கோட்பாடுகளை ஆராய்க.

17. தொல்காப்பியரின் உவமவியல் செய்திகளைக் கட்டுரைக்க.

18. வெண்பாவின் இலக்கணத்தை அதன் வகைகளுடன் விவரிக்க.

19. செய்யுளியல் சுட்டும் இலக்கிய வகைகளை ஆராய்க.

20. மரபியல் பேசும் நூல் குறித்த செய்திகளைத் தொகுத்துரைக்க.

| R–2881 |
|---|

| Sub. Code |
|---|
| 411403 |

**M.A. DEGREE EXAMINATION, APRIL 2019**

**Fourth Semester**

**Tamil**

திறனாய்வும், இலக்கியக் கொள்கைகளும்

**(CBCS – 2016 onwards)**

Time : 3 Hours                                        Maximum : 75 Marks

பகுதி அ                    $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் சுருக்கமான விடை தருக.

1. திறனாய்வின் பயன்கள் யாது?

2. மரபுவழித் திறனாய்வு என்றால் என்ன?

3. கற்பனை குறித்து கோல்ரிட்ஜ் தரும் விளக்கம் யாது?

4. தமிழ் இலக்கண நூல்களில் கற்பனை குறித்த செய்திகள் இரண்டினைத் தருக.

5. உள்ளுறை-குறிப்பு வரைக.

6. சங்க அகமரபுகள் இரண்டினைக் குறிப்பிடுக.

7. பக்தி இலக்கியத்தின் கொள்கைகள் யாவை?

8. புதின இலக்கியத்தின் இயல்புகளைக் குறிப்பிடுக.

9. இலக்கியத்திறனாய்வு இலக்கியக்கொள்கை இடையே உள்ள வேறுபாடுகள் இரண்டினைச் சுட்டுக.

10. தலித்தியம்-குறிப்பு வரைக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

பின்வரும் வினாக்களுக்கு **ஒரு பக்க** அளவில் விடை தருக.

11. (அ) உரையாசிரியர்களின் திறனாய்வுப் பார்வை குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) வரலாற்றுமுறைத் திறனாய்வின் இயல்புகளை எடுத்துரைக்க.

12. (அ) கற்பனை குறித்து அடிசன், வில்லியம், டெய்லர், வேர்ட்ஸ் வொர்த் ஆகியோரின் கருத்துக்களை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) ஐவகை உணர்ச்சிகள் குறித்த வின்செஸ்டரின் கருத்துக்களை எடுத்துரைக்க.

13. (அ) நோக்கு, மெய்ப்பாடு குறித்த தொல்காப்பியரின் கொள்கைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) தமிழில் அற இலக்கியக் கொள்கைகள் குறித்து விளக்குக.

14. (அ) இலக்கிய வகைமைக்கு ஏற்ப இலக்கியக்கொள்கை வேறுபடுவதைச் சான்றுடன் நிறுவுக.

(அல்லது)

(ஆ) நாடக இலக்கியத்தின் இலக்கியக் கொள்கைகளை மதிப்பிடுக.

15. (அ) உருவியல் திறனாய்வு முறையின் இயல்புகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) பின் நவீனத்துவத் திறனாய்வு அணுகுமுறையின் இயல்புகளை எடுத்துரைக்க.

பகுதி இ (3 × 10 = 30)

பின்வரும் வினாக்களில் ஏதேனும் **மூன்றனுக்குக் கட்டுரை** வடிவில் விடை தருக.

16. திறனாய்வின் நோக்கம், பயன், திறனாய்வாளனின் தகுதிகள் குறித்துக் கட்டுரை வரைக.

17. தமிழ் இலக்கியங்களில் இடம்பெறும் உணர்ச்சிகள் குறித்துக் கட்டுரை வரைக.

18. தொல்காப்பியரின் இலக்கியக் கொள்கைகளைக் கட்டுரைக்க.

19. இக்கால இலக்கியக் கொள்கைகளைச் சான்றுடன் விளக்குக.

20. திறனாய்வு அணுகுமுறைகள் குறித்துக் கட்டுரைக்க.

---

**R–2882**

| Sub. Code |
|---|
| 411404 |

**M.A. DEGREE EXAMINATION, APRIL 2019**

**Fourth Semester**

**Tamil**

ஒப்பிட்டு நோக்கில் உலகச் செம்மொழிகள்

**(CBCS – 2016 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ (10 × 2 = 20)

பின்வரும் **அனைத்து** வினாக்களுக்கும் **ஓரிரு சொல்/ தொடர்களில்** விடை தருக.

1. உலகில் எத்தனை மொழிகள் செம்மொழிகளாக ஏற்கப் பெற்றுள்ளன?

2. நடுவண் அரசு தமிழைச் செம்மொழி என அறிவித்த ஆண்டு?

3. தமிழ்ச் செவ்விலக்கிய நூல்களின் தொகை யாது?

4. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற ஆங்கில நூலின் ஆசிரியர்?

5. கிரேக்கச் செவ்விலக்கியங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

6. விவிலியத்தின் இரு பெரும் பிரிவுகளை எழுதுக.

7. 'இடந்தலைப்பாடு' என்றால் என்ன?

8. அறம் – குறிப்பு வரைக.

9. மலையாளம் – பொருள் தருக.

10. காளிதாசர் இயற்றிய நூல்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

பகுதி ஆ (5 × 5 = 25)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) தமிழின் தொன்மைக்கான ஆதாரங்களைப் பட்டியலிடுக.

(அல்லது)

(ஆ) கிரேக்க, இலத்தீன் மொழிகளின் தொன்மையை எடுத்துரைக்க.

12. (அ) செம்மொழிகளின் புராண இதிகாசங்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) செவ்வியல் நாடகங்கள் குறித்து விளக்குக.

13. (அ) இயற்கைக் காட்சிகளின் வருணனையைச் செம்மொழி நூல்கள் வழி விவரிக்க.

(அல்லது)

(ஆ) தமிழரின் விருந்தோம்பல் பண்பாட்டினைப் புலப்படுத்துக.

14. (அ) சமய வழிபாட்டு இலக்கியக் கருத்துக்களை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) தமிழ் நீதி இலக்கியங்களின் தொகையாக்கம் குறித்து விரிந்துரைக்க.

15. (அ) தண்டியலங்காரமும் தமிழ்க் காப்பியங்களும் குறித்து மதிப்பிடுக.

(அல்லது)

(ஆ) தமிழ் – கிரேக்கத்தின் கையறுநிலைப் பாடல்களை ஒப்பிடுக.

**பகுதி இ** (3 × 10 = 30)

பின்வரும் வினாக்களில் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. செம்மொழிக்கான தகுதிகள் குறித்துக் கட்டுரைக்க.

17. திராவிட மொழிக் குடும்பத்தில் தமிழ்மொழிப் பெறுமிடத்தை மதிப்பிடுக.

18. செவ்வியல் இலக்கியங்களில் காணப்படும் காப்பிய மரபுகளை ஆராய்க.

19. அரேபிய மொழி இலக்கியங்களை வகைப்படுத்துக.

20. ஒப்பீட்டு நோக்கில் உலகச் செம்மொழிகள் இரண்டினை எடுத்துரைக்க.